முரசொலி

பக்கங்கள் நான்கு

விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 200 ஆங்கீரச வைகாசி 32 (14.06.1992) ஞாயிறு

இலங்கை நாகரிகமிக்க பௌத்த நாடு - பிரேமதாஸ

உலகில் பௌத்த மதம் தலைதூக்கியுள்ள நாடுகளில் நாகரிகமிக்க நாடு இலங்கையே என ஜனாதிபதி பிரமதாஸ தெரிவித்துள்ளார், அனுராதபுரத்தில் மத வைபவத்தில் பேசிய அவர் பௌத்த மதக் கொள்கையின்படி நடந்தால் எந்தப் பிரச்சினைகளும் எழாது எனவும் கூறினார். காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா பௌத்த மதத்தை வளர்க்க பெரிதும் பாடுபட்டார் எனவும் அவர் மேலும் சொன்னார்.

மாலை நேரம் தாக்குதல்

மண்டைதீவு இராணுவ முகாம் பகுதியிலிருந்து நேற்று மாலை 5 மணி யளவில் யாழ் கரையோரப் பகுதிகளை நோக்கிப் பீரங்கித் தாக்குதலும், ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. (6)

சுகர்ட்டோ ஆட்சி அமைப்பர்

இந்தோனிசியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஜனாதிபதி சுகர்ட்டோவின் கட்சி அமோக வெற்றி பெற்றது.

இங்கும் பரீட்சை

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் கிராமசேவையாளர் பரீட்சை நேற்று நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 6

அ.தி.மு.க. ஆட்சிக்கு எதிராக தி.மு.க. ஆர்ப்பாட்ட பேரணி

கோபாலசாமி எம். பி. உட்பட 10 ஆயிரம் தொண்டர்கள் கைது

அண்ணாதிராவிட முன்னேற்ற கழக ஆட்சிக்கு எதிராக நேற்று தமிழகம் எங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆர்ப்பாட்ட பேரணியை நடத்தினர்.

தமிழக விவசாயிகளுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த இலவச மின்சாரத்துக்கு கட்டணம் வசூலிப்பதென அ.தி.மு.க. அரசு முடிவுசெய்ததை எதிர்த்தே இந்த ஆர்ப்பாட்ட பேரணி நடைபெற்றது.

சுமார் பத்துலட்சம் தமிழக விவசாயிகள் இதனால் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாட்டுவண்டிகள், உழவு யந்திரங்களில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக சுமார்

—04 ஆம் பக்கம் பார்க்க

உணவு முத்திரைகளுக்கு குரக்கன் மா கிடைக்கும்

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் வறுமை நிவாரண உணவு முத்திரை மாணவர் உணவு முத்திரை பெறுபவர்களுக்கு குரக்கன் மாவை வழங்குவதற்கு யாழ் செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கென 10 000 கிலோ குரக்கன் மாவை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. 47

தெரிவுக்குழுவை புலிகள் யாழ் அழைக்கலாமாம்

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் சுதந்திரக்கட்சி மீண்டும் சேர்ந்துகொள்ள முடிவுசெய்ததை அடுத்து தெரிவுக்குழு இம்மாதம் 20 ஆம் திகதி கூடவிருக்கிறது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் சுதந்திரக் கட்சியின் தெரிவுக்குழு உறுப்பினர் ஹாலிம் இஷாக் ஆகியோர் மெக்காவிலிருந்து நாடு திரும்பியதும் தெரிவுக்குழுவின் அடுத்த அமர்வை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது,

இதேவேளை புலிகள் இயக்கத்தினர் விரும்பினால் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பான தமது யோசனையை தெரிவுக்குழு முன் சமர்ப்பிக்கலாம் அல்லது தெரிவுக்குழுவை யாழ்ப்பாணத்திற்கு அழைக்கலாம் என்று புலிகள் இயக்கத்திற்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

தெரிவுக்குழுவின் அங்கத்தவர் ஒருவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமூலம் இந்தத் தகவலை அனுப்பியிருப்பதாக தெரியவருகிறது.

இவ்வாறு கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

★ கிராமசேவையாளர் போட்டிப் பரீட்சை

யாழ் மாவட்டத்தில் மட்டும் நேற்று நடைபெறவில்லை

நாடு முழுவதும் நேற்று நடைபெற்ற கிராமசேவையாளர் போட்டிப் பரீட்சை யாழ் மாவட்டத்தில் மட்டும் நடைபெறவில்லை.

யாழ் மாவட்டத்திற்கான கிராமசேவையாளர் போட்டிப் பரீட்சை வினாத்தாள்கள் பலாலிக்கு வந்திருந்தும் அங்கிருந்து எடுத்துவர முடியாததே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காலை 9மணிமுதல் மாலை 3 மணிவரை சுமார் ஆயிரக்கணக்கான பரீட்சார்த்திகள் 18 பரீட்சை நிலையங்களில் காத்திருந்து ஏமாற்றத்துடன் வீடு திரும்பியதைக் காண முடிந்தது.

வினாத்தாள்கள் எப்படியும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமூலம் எடுத்துவரப்படும் என கல்வித் திணைக்களம் உறுதி கூறியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (06)

★ பி, பி, ஸிக்கு இராணுவ அதிகாரிகள் தகவல்

யாழ்ப்பாணத்தை கைப்பற்றினாலும் நிரந்தரமாக வைத்திருக்க முடியாது

யாழ்ப்பாணத்தை படையினர் கைப்பற்றினாலும் அதனை நிரந்தரமாக வைத்திருப்பது தான் பிரச்சினை.

இவ்வாறு இராணுவ அதிகாரிகள் கூறியதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

உலகில் உள்ள கிளர்ச்சிப் படைகளில் மிகவும் சிறப்பாக ஒழுங்கான படை விடுதலைப் புலிகள் என அரச உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகவும் பி. பி. ஸி கூறியது.

புலிகள் தாக்கப்பட்டு பின்வாங்கிச் சென்றாலும் கடமிகுந்த ஆக்ரோசத்தோடு பதில் தாக்குதல்களை நடத்தும் வல்லமையைக் கொண்டுள்ளனர்,

இப்படிப்பட்ட விடுதலைப் புலிகளை முற்றாக அடக்குவதுதான் இராணுவத்துக்கு சிரமமாக இருக்கலாம் என்பதை இராணுவ அதிகாரிகளின் மரணங்கள் எடுத்துக் கூறுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அண்மையில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க புலிகளை முற்றாக ஒழிக்க வேண்டும் என்ற ரீதியில் பேசியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

14 இந்தியப் படையினர் நாகலாந்தில் பலி

நாகலாந்தில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் திடீரெனத் தாக்குதல் நடத்தியதில் 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்

இராணுவத்தினரின் வாகன அணி மீது இவர்கள் திடீரெனத் தாக்குதல் நடத்தினர்.

தீவிரவாதிகளைத் தேடி படையினர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காரைநகரிலிருந்தும் பீரங்கித் தாக்குதல்கள்

நேற்றுக்காலை 10 மணியளவில் காரைநகரில் இருந்தும் கடற்படையினரால் பொன்னாலை திருவடிநிலைப் பகுதிகளை நோக்கி பீரங்கித்தாக்குதல்கள் நடத்தப்பட்டன,

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோவிலுக்கு பக்தர்கள், அடியார்கள் வழமைபோலச் சென்று வருகின்றனர், பூசைகளும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. முன்னரைவிட தற்போது அடியார்கள் தொகை அதிகரித்து வருகிறது. 18

அகதிகளுக்கு உதவுவதற்கு செஞ்சிலுவை நடவடிக்கை

யாழ் குடாநாட்டில் தற்போது இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு உதவுமாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை சகல பிரிவு கிளைகளையும் சேவையில் ஈடுபடும்படி கேட்டுள்ளது.

சில பிரிவுக்கிளைகளில் நிர்வாகத்திற்கிடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள் அனைத்தையும் மறந்து ஒற்றுமையாக இன்றைய சூழ் நிலையில் மக்களுக்கு உதவ செய்ய முன்வரவேண்டும்என்றும்கூறப்பட்டுள்ளது. 06

வலிவடக்கு அகதிகளுக்கு நிவாரண உதவி வேண்டும்

வலி வடக்குப் பகுதியில் இராணுவத்தினரின் தாக்குதல்களை அடுத்து அங்குள்ள பொதுமக்கள் இடம் பெயர்ந்து வந்து வலி தென்மேற்கு, வலி மேற்குப் பகுதிகளில் தஞ்சமடைந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் தமது உறவினர்களது வீடுகளில் தங்கி வருகின்றனர். சிலர் தேவாலயங்களில் தங்கி வருவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

நண்பர்கள், உறவினர்களது வீடுகளில் தங்கியுள்ளோருக்கும் நிவாரண உதவிகள் வழங்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கின்றனர். 18

க. பொ. த. மாணவருக்கு முன்னோடிப் பரீட்சை

க. பொ. த சாதாரணதர வகுப்பு மாணவர்களுக்கு பரீட்சையில் விடை எழுதும் பயிற்சியை அளிக்கும் முகமாக தமிழீழக் கல்வி மேம்பாட்டுக் கழகம் இம் மாணவர்களுக்கிடையே பரீட்சை ஒன்றை நடத்தவுள்ளது.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள க. பொ. த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கு ஒரு முன்னோடிப் பரீட்சையாக நடத்தி சான்றிதழ்களும் வழங்க தமிழீழக் கல்வி மேம்பாட்டுக் கழகப் பரீட்சைக்குழு தீர்மானித்துள்ளது. 18

இவ்வார இராசிப்பலன்

14. 06 . 1992 20- 06 - 1992

மேடம்

உங்களுக்கு இளையசகோதரத்தால் மனவேதனை ஏற்படும் தொழில் இடத்தில் சம அளவான பலன்களை எதிர்பார்க்கலாம். அயலவர்களால் அபிப்பிராயபேதமும், பொருள் விஷயமாக சில தப்பபிப்ராயங்களும் ஏற்படும், புதிய திட்டங்களால் நன்மதிப்பு ஏற்படும். 14, 15 ஆம் திகதிகளில் பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

இடபம்

நீங்கள் நம்பியிருந்த உறவினர்கள் கண்டபடி வீண்பழி சுமத்துவார்கள், தொழில் ஸ்தானத்தில் நல்ல வரவேற்பு இருந்தாலும், சிலர் வீண்பழி சுமத்துவார்கள், உடல் களைப்பு கொடுக்கலாம், காலில் காயமும், கைப்பொருள் இழப்பும் ஏற்பட இடம் உண்டு, 16,17,18 ஆம் திகதிகளில் கவனமாக இருக்கவும்.

மிதுனம்

உங்களுக்கு உற்றவர்களாலும், நண்பர்களாலும் வேதனை ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் நற்பலன்கள் கொடுக்கும். பொதுவிஷயங்களில் அபிப்பிராயபேதங்கள் ஏற்படும், எதிர்ப்பாளருடன் 18, 19, 20 ஆம் திகதிகளில் கொடுக்கல் வாங்கலில் அவதானமாக இருக்க வேண்டும், உறவினரொருவரின் பிரிவு வேதனை தரும்.

கடகம்

உங்களுக்கு அடிக்கடி அலைச்சலைக் கொடுத்தாலும் தொழில் ஸ்தானத்தில் முன்னேற்றமும், மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்' சில புதிய அலுவல்களில் ஆர்வம் அதிகரிக்கும், குடும்பச் செலவு அதிகரிக்கும், தூரத்துச் செய்திகளால் ஓரளவு மன ஆறுதல் ஏற்படும்.

சிங்கம்

நீங்கள் சில புதிய அலுவல்களுக்காக ஓடியாடித்திரிய வேண்டி வரும். அபிப்பிராய பேதமும் அலைச்சலும் இடைக்கிடை ஏற்படாமல் இருக்காது, ஆயினும் தொழில் ஸ்தானத்தில் விடாமுயற்சியால் சில காரியங்கள் அனுகூலமாகும். உங்கள் புதிய திட்டங்களில் அவதானமாக இறங்கவும் இல்லை பின்னர் வருந்துவீர்கள்.

கன்னி

உங்களுக்கு காரிய அனுகூலம் ஏற்படும், நண்பர்களும், பெரியவர்களும் உதவுவார்கள், விசாரணைகள், வீண்பழிகள் வரும், சகோதரங்கள் நல்லதைச் சொல்ல மாட்டார்கள். தொழில் ஸ்தானத்தில் நல்ல முன்னேற்றம் அடைவீர்கள். பொதுத்தொண்டு மற்றவர்களுக்கு உதவ ஓடியாடித் திரிவீர்கள்.

நல்லூர் சோதிடர்
இ. மகாதேவா

துலாம்

உங்களுக்கு எதிர்பாராத தாக்கங்களால் கலக்கம் ஏற்படும், உறவினரின் பிரிவு வேதனை தரும். வயிறு, கைகால் நோய் அல்லது காயங்கள் ஏற்படும், குடும்ப அலுவல்களால் அலைச்சல் ஏற்படும். தொழில்ஸ்தானத்தில் நன்மைகள் உண்டு.

விருச்சிகம்

நீங்கள் சொல்வாக்கால் செல்வாக்கும் பெற முயற்சிப்பீர்கள், குடும்பத்தினருடன் அபிப்பிராயபேதங்கள் ஏற்படும், பிறரின் அலுவல்களுக்காக ஓடியாடித்திரிவீர்கள்' உடல்களைப்பு, பலவீனம் ஏற்படும், தொழில்ஸ்தானத்தில் ஏட்டிக்கு போட்டியான சம்பவங்கள் ஏற்படலாம், எவரையும் நம்ப வேண்டாம்.

தனு

உங்களுக்கு எடுத்ததற்கெல்லாம் தடை, தாமதங்கள் ஏற்பட்டபடியே இருக்கும், விஷபீடைகளால் தொல்லைகள் ஏற்பட்டபடி இருக்கும், குடும்பத்தினருக்கு இடமாற்றங்கள் கொடுக்கும் தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் ஏற்படும்.

மகரம்

நீங்கள் புதிய திட்டங்கள் தீட்டிச் செயற்பட முயற்சி எடுப்பீர்கள், உடல் நிலையில் சிலருக்கு சூட்டு வருத்தங்கள், இருமித்தாக்கங்கள் ஏற்படலாம், பிரயாணங்களில் அவதானமாக இருக்க வேண்டும். பொருள் இழப்புக்களைக் கொடுக்கும், 18, 19 ஆம் திகதிகளில் அவதானமாக இருக்க வேண்டும் தெய்வபக்தி முக்கியமாகும்,

கும்பம்

உங்களுக்கு எதிர்பாராத கவலையொன்று காத்திருக்கின்றது, தாய் வழியினரின் உதவிகள் கிடைக்கும், நண்பர்கள் உதவ மாட்டார்கள், இளைய சகோதரத்திற்கு மாற்றங்கள் ஏற்படும், எதிர்ப்பாளருடன் வாக்குவாதங்கள் ஏற்படும், குடும்ப அலுவல்களாக பொருள் விஷயமாக பேச்சுக்கள் ஏற்படும்.

மீனம்

உங்களின் பேச்சுவார்த்தைகளால் நன்மைகள் ஏற்படாது, தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும், அடிக்கடி பயமும் மனக்கவலைகளும் ஏற்படும். நண்பர்கள் உதவுவார்கள், பணத்திற்காக ஓடியாடித் திரிவீர்கள், உறவினர்களால சில உதவிகள் கிடைக்கும்,

23 பட்டதாரிகளுக்குப் பயிற்சி

வடக்குக் கிழக்கும் பட்டதாரிகள் 23 பேருக்குத் தேசிய வர்த்தகச் சேம்பர் தொழிற்பயிற்சியளிக்கின்றது.

நாட்டிலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்குத் தொழிற்பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழேயே இப் பயிற்சி வழங்கப்படவுள்ளது, நாட்டின் சகல மாவட்டங்களிலிருந்தும் 195 பட்டதாரிகள் இதற்கெனத் தெரிவு செய்யப்படுவர்.

'சார்க்' நாடுகள் ஒப்பமிடும்

"புவி காலநிலை மாற்றம் மற்றும் உயிரியல் மாறுபாடு தொடர்பான சாசனங்களில் கைச்சாத்திடுவதற்கு "சார்க்" நாடுகள் இணங்கியிருக்கின்றன.

பிரேஸிலின் றியோ 'டி ஜெனேரோவில் நடைபெறும் ஐ.நா. சுற்றாடல் அபிவிருத்தி உச்சி மாநாட்டிலேயே இச் சாசனங்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும்.

பலாலியில் படை அதிகாரிகள்

முப்படைகளையும் சேர்ந்த முக்கிய அதிகாரிகள் கள நிலைமையை மதிப்பீடு செய்து அடுத்த நடவடிக்கை பற்றித் தீர்மானிப்பதற்காக நேற்று முன்தினம் காலை யாழ்ப்பாணம் விரைந்ததாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சேந்தான்குளம் பகுதியில் 9 பணித்தியாலங்கள் போர் நிகழ்ந்ததாகவும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாவாந்துறை நீக்கிலஸ் வெற்றி

நல்லூர் தெற்கு சன சமூக நிலையம் நடாத்தும் வலைப்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது. ஆரம்ப வைபவத்தில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் ஆ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகவும், யாழ் மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி எஸ் அண்ணாத்துரை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

ஆரம்பநாள் அன்று இடம் பெற்ற போட்டியில் சென் நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி பாஷையூர் சென் அந்தனிஸ் 'பி' பிரிவு அணியை வென்றது.

விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான கே. நாகேந்திரன் நிகழ்ச்சியை நெறிப்படுத்தினார். (16)

அமைச்சர்களும் பங்கேற்பர்

எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ள ஜனாதிபதி ஆர் பிரேமதாச தமிழ்க் கட்சிகள் சந்திப்பின் போது சில அமைச்சர்களும் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுவதாகக் கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

1989 தேர்தலில் சுதந்திரக்கட்சிக்கும் ஐ,தே.க. வுக்கும் கே,ஜி.பி. நிதிஉதவி

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் உளவுச் சேவையான கே, ஜி பி, அளித்த பண உதவி 1989 ஆம் ஆண்டு தேர்தலில் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக முன்னர் தேர்தலில் பெற்ற ஆசனங்களிலும் பார்க்க எட்டு மடங்கு அதிகமான ஆசனங்களைப் பெற உதவியது என்று கே. ஜி பி யின் தலைவர் விளாடிமீர் குறுகோ மிக்கேல் கோயர் சேவுக்கு அறிவித்தாரென்று மொஸ்கோவிலிருந்து அனுப்பப்பட்ட செய்தி தெரிவிக்கிறது என கடந்த வியாழக்கிழமை வெளியான 'இந்து'ப் பத்திரிகையின் செய்தி தெரிவிக்கின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலும் ஐக்கியதேசியக் கட்சியிலும் உள்ள கே ஜி. பிக்கு விசுவாசமானவர்கள் எம். பிக்கள் ஆவதற்கு கே, ஜி. பி, பண உதவி செய்ததாக குறுகோ அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கே ஜி பி அளித்த ஆதரவுக்காக திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்க நன்றி தெரிவித்துள்ளார் என்றும் பாராளுமன்றத்தில் கட்சிக்கு இடைத்திருக்கும் அதிகரித்த செல்வாக்கை மேற்கத்தியசார்பான வெளிநாட்டுக் கொள்கையும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாயக விரோத நோக்கையும் தமது கட்சி தடுப்பதற்கு சாதகமாக பயன்படுத்தும் என்றும் அவர் உறுதியளித்திருந்தார்,

நீதிமன்றத் தீர்ப்பு இன்னமலே கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்வதற்கு இடதுசாரிசார்பு பயங்கரவாதிகளுக்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவளித்து வந்தது என்பதை எடுத்துக்காட்டுவதாகவே தற்போதைய அம்பலமாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன

இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளப் பாதிப்புக்கு ரூபா பத்தாயிரம் உதவி

கொழும்பில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் வீடிழந்த, வீடுசேதமுற்றவர்களுக்குப் பத்தாயிரம் ரூபா சமூக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வெள்ளத்தால் பல கோடி ரூபா நட்டம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

இறுதி ஆட்டத்தில் ஆட சென்றலைற்ஸ் அணி தகுதி

டொனால்ட் வெற்றிக்கிண்ணத்திற்காகச் சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்டுவரும் 50 பந்து மாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற அரை இறுதிப் போட்டியில் சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை 12 ஓட்டங்களால் தோற்கடித்து இறுதி ஆட்டத்தில் ஆடத் தகுதி பெற்றது.

சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம் அதன் துடுப்பாட்டத்தில் 49 5 பந்து மாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 212 ஓட்டங்களைக் குவித்தது. இதில் எஸ். சண்முகலிங்கம் பெற்றுக் கொடுத்த ஓட்டங்கள் 78.

ஜொனியன்ஸ் அணி அதன் துடுப்பாட்டத்தில் 4 84 பந்து மாற்றங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களை மாத்திரம் பெற்றநிலையில் தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று.

இதன் இறுதியாட்டத்தில் இன்று ஜொக்கிரார் அணியை எதிர்த்து சென்றலைற்ஸ் அணி ஆடவுள்ளது. இவ்வாட்டத்தில் பிரதம விருந்தினராக அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகர் கலந்துகொள்வார். காலை 9. 00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இவ்வாட்டம் ஆரம்பமாகவுள்ளது. (16)

தீவிரவாதிகள் தப்பியோடினர்

அஸாமில் தீவிரவாதிகள் நால்வர் சிறையிலிருந்து தப்பிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இவர்கள் சிறைக் காவலர்களைத் தாக்கிவிட்டுத் தப்பிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

இச் சம்பவம் தொடர்பாக சிறைச்சாலையின் சில அதிகாரிகளும் காவலவர்களும் தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சிறுவிளம்பரம்

ஜோதிடம்

தீராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், விவாகம் நடவாமை, சாப தோஷங்கள் நீங்கி அதிர்ஷ்டத்துடன் வாழ ஜாதகத்துடன் நேரில் வரவும். அதிர்ஷ்டம் அழைக்கிறது. சாந்தி பரிகாரங்களை கூறுவதுடன் யந்திரங்களும் வழங்குகிறோம் ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 96. கோவில் வீதி. நல்லூர், (ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோவிலடி)

06038

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

பட்டப்பின் கல்வி
டிப்ளோமா
பகுதி நேர/ முழுநேர
அனுமதித் தேர்வு

மேற்குறித்த நெறிக்கான அனுமதிப் பரீட்சை 21/ 06/ 92 (ஞாயிறு) யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் காலை 9 00 மணிக்கு நடைபெறவுள்ளது தகுதியான பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன. உரிய நேரத்தில் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதோர் 20/ 6/92 இற்கு முன் கிழமை நாட்களில் வழமையான காரியாலய நேரத்தில் யாழ் பல்கலைக்கழக பரீட்சைக் கிளையுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்

06030

நல்லூர் ... யாழ்ப்பாணம்

தமிழகம் நோக்கி...

'விவஸ்தை கிடையாதா'?

தமிழக அரசின் மது விலக்கு பிரசார திரைப்படத் தொடக்க விழாவில் பேசிய பட அதிபர் ஜீ.வி. கிருஷ்ண ஜெயந்தி, காந்தி ஜெயந்தி கொண்டாடுவது போல் தமிழக முதல்வருக்காக 'ஜெயஜெயந்தி' கொண்டாட விரும்புவதாகக் கூறினார்.

அதற்கு முதல்வரும் இதற்கான பாராட்டு விழாவை வைத்துக்கொள்ள சம்மதித்து விட்டாராம்.

தமிழகம் எங்கே செல்கிறது என்று கல்விமான்கள், ஆன்மிகவாதிகள் அங்கலாய்க்கிறார்கள் என்று தகவல்.

ஆளப்பிறந்த ராஜபரம்பரை என்ற நினைப்பு - அன்பழகன்

"இன்றைக்கு ஆட்சிக்கு வந்தோர் ஏதோ ஆளப் பிறந்த ராஜ பரம்பரையினரின் ஆட்சி என்பது போன்ற ஆணவத்தில் மிதக்கிறார்கள்."

இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் க.அன்பழகன் தமிழக நிருபருக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியிருக்கிறார்.

உழைத்தேன் உயர்ந்தேனா தெரியவில்லை என்கிறார் ஆர்.எம்.வி.

"13 வயதில் உழைக்கத் தொடங்கினேன் அன்று முதல் இன்றுவரை உழைத்துச் சம்பாதிக்கிறேன் ஆனால் உயர்ந்திருக்கிறேனா என்பது தெரியவில்லை"

இவ்வாறு முதலமைச்சர் ஜெயலலிதாவினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட அமைச்சர் ஆர்.எம்.வீரப்பன் தமிழக நாளிதழ் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மனச்சாட்சியை அடகு வைத்து

"மனச்சாட்சியை அடகு வைத்துவிட்டு ஜெயலலிதாவின் நட்டுவாங்கத்திற்கேற்ப நாவலர் நெடுஞ்செழியன் நாட்டியமாடுகிறார்" என்று தி.மு.க. பேச்சாளரான கே.பி. ராமலிங்கம் கூறியுள்ளார்.

நீராவியடியில் இன்று

நீராவியடி சித்தி விநாயகர் ஆலய உற்சவ இறுதி நாளான இன்று நீராவியடி இளைஞர்களின் முழுமையான ஒத்துழைப்புடன் விழா சிறப்புற நடைபெறவுள்ளது.

சிறப்பு நிகழ்ச்சிகளாக இணுவையூர் என் சின்னராசா புதல்வர்களின் தவிலும், நாதஸ்வர வித்துவான் சுந்தரமூர்த்தி குழுவின் நாதஸ்வரமும், சின்னமணியின் வில்லிசையும், சாந்தனின் இசைக்கச்சேரியும் இடம்பெறவுள்ளன.

கூண்டோடு கைலாசம் காளிமுத்து எச்சரிக்கை

கண்டா செல்கிறாய் கூண்டு? கூண்டோடு கைலாசம் போகப்போகிறாய். ஒவ்வொரு மந்திரிகளையும் அழைத்து நீ விசாரிப்பாய்... விசாரிக்கிற அளவுக்கு உனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

இவ்வாறு முன்னாள் தமிழக அமைச்சர் கே.காளிமுத்து முதலமைச்சர் ஜெயலலிதாவை மிக வன்மையாகக் கண்டித்துள்ளார்.

பொய்யில் ஜெயலலிதாவை மிஞ்ச முடியாது - கலைஞர்

"பொய் சொல்வதில் ஜெயலலிதாவை மிஞ்சுவதற்கு யாருமே பிறக்கவில்லை, அரிச்சந்திரன் வீட்டிலே பிறந்தவர் மாதிரி, உண்மை பேசுவதாக நடித்து அவர் கொட்டியுள்ள பொய்களை கூடை கூடையாக நிரப்பி வைக்கலாம்."

மேற்கண்டவாறு தி.மு.க. தலைவர் கலைஞர் மு.கருணாநிதி 'முரசொலி' யில் தெரிவித்துள்ளார்.

முதல் எதிரி அ.தி.மு.க. ராமதாஸ் நிலைப்பாடு

"எங்களின் முதல் எதிரி அ.தி.மு.க. இரண்டாவது எதிரி இந்திரா காங்கிரஸ்"

இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ்.ராமதாஸ் 'தினத்தந்திக்கு' அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அன்புத் தம்பி

தென்காசியில் சிறு சேமிப்புத்துறை பரிசளிப்பு விழாவில் நிதியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கலந்துகொள்ள வந்திருந்தபோது அவரை வரவேற்றுப் பலவிதமான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

அதில் ஒருவர் அதிக உணர்ச்சிவசப்பட்டும் புரட்சித் தலைவியின் அன்புத் தம்பி நாவலர் அவர்களே வருக, வருக என்று போஸ்டர் அடித்திருந்தார்.

அதைப் பார்த்ததும் அமைச்சருக்கு முகம் அவுட்டாகி விட்டதாம்.

ஜப்பானியரின் தேசப்பற்று

இரண்டாவது உலகப் போரின்போது உருக்குலைந்து சீரழிந்துபோய் இருந்த ஜப்பான் இன்று அமெரிக்காவுக்குப் போட்டியாகப் பொருளாதாரத் துறையில் இமாலயச் சாதனை புரிந்துள்ளதற்கு முக்கிய காரணம் ஜப்பானியர்கள் சொல்லளவில் மட்டுமின்றிச் செயலளவிலும் உண்மையான தேசியவாதிகளாகத் திகழ்வதே.

1868 இல் சமபலம் வாய்ந்த இரு குழுக்கள் அதிகாரவெறியுடன் போர் புரிய ஆயத்த நிலையில் இருந்தன.

ஒன்று ரொக்குகவா சொகுனேற் மற்றது ஏகாதிபத்திய வர்க்கத்தைச் சார்ந்தது. இரண்டு குழுக்களுக்குமே வெற்றிவாய்ப்புச் சமமாக இருந்தது.

இந்த நிலைமையை மேலும் மோசமாக்கும் வண்ணம் அன்றைய காலகட்டத்தில் வல்லரசுகளாகத் திகழ்ந்த பிரிட்டனும், பிரான்சும் ஒவ்வொரு பக்கத்தை ஆதரித்தன.

இந்தப் பிரச்சினையில் இரு பகுதிகளுக்கிடையும் பேச்சுவார்த்தை நடத்திய பிரதம பேச்சுவார்த்தைத் தூதவர்கள் பிரச்சினைகளின் ஆழத்தை உணர்ந்திருந்தனர் ஜப்பானின் எதிர்காலமே முதன்மையாகிய அம்சமாக அவர்கள் கண்டனர். அதற்கே முன்னுரிமை வழங்கவேண்டும் என அவர்களுக்குத் தென்பட்டது.

இந்தக் காலகட்டத்தில் ஆசியாவின் ஒவ்வொரு நாடும் அடுத்தடுத்து மேற்கத்திய வல்லரசுகளின் குடியேற்ற நாடுகளாக்கப்பட்டன.

ஜப்பான் உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டிருப்பின் எப்பகுதி வென்றிருப்பினும் நாடு குழப்ப நிலைக்குத் தள்ளப்பட்டு இறுதியில் மேற்குநாடுகள் கைப்பற்றியிருக்கும்.

ஸ்ரீலங்கா தலைவர்கள் போன்று அல்லாது, ஜப்பானியத் தலைவர்கள் தமது எதிரிகளை எவ்வகையிலும் தோற்கடிக்க முற்படவில்லை.

அதற்குப் பதில் நாட்டின் நன்மை கருதித் தங்கள் வேற்றுமைகளை ஒதுக்கி வைத்தார்கள்.

ஜப்பானின் மேலான நலன் கருதிச் சமாதானத்தை ஏற்படுத்திய பேச்சுவார்த்தைத் தூதவர்களான கற்சுகைசு மற்றும் செய்கோ தக்கமோறி ஆகியோரின் பாரம்பரியம் இன்னும் ஜப்பானில் பின்பற்றப்படுகின்றது.

துரிதகதியில் அபிவிருத்தித்திட்டம்

மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் மேலோங்கும் வளர்ச்சிக்கான அபிவிருத்தித் திட்டங்கள் துரிதகதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

அதிபரின் ஆக்கபூர்வ முயற்சியின் பேரில் இந்த வகையில் பெற்றோரின் ஒத்துழைப்பும் நாட்டமுடன் நாடப்பட்டுள்ளது.

நல்லொழுக்கம், சமூக சேவை உள்ளிட்டதாக அபிவிருத்திப் பணிகளும் மாணவர் எழுச்சியும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பஞ்சாப் பதற்றம் நீடிப்பு தொடர்கின்றன கொலைகள்

பஞ்சாப் மாநிலத்தில் கொலைச் சம்பவங்கள் நாளாந்தம் நீடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினமும் தீவிரவாதிகளால் சிலர் கொல்லப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் சட்ட ஒழுங்கு நிலைமை மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மாநிலத்தில் புதிய ஆட்சி ஏற்படுத்தப்பட்ட பின்னர் கொலைகள் நூற்றுக்கணக்கில் நிகழ்ந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வு அரசாங்கம் எதிர்நோக்கும் நிர்ப்பந்தம்

1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து பதவிக்கு வந்த சகல மாகாணசபைகளின் ஆயுட்காலம் இவ்வருட இறுதியுடன் முடிவடைகின்றது. எனவே இவற்றுக்கான தேர்தல் நடாத்தப்படல் வேண்டியது கட்டாயமாகிறது.

1990 ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தீர்மானம் மூலம் கலைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கும் ஏனைய ஏழு மாகாணசபைகளுக்கும் தேர்தல்கள் நடாத்தப்படல் வேண்டும்.

1988 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்களைப் பகிஷ்கரித்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இம்முறை தேர்தல்களில் பங்கு பற்றப் போவதாக அறிவித்து விட்டது.

எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் தேர்தல்கள் நடைபெற வேண்டுமென்பதால் வேட்பாளர் மனுக்கள் தாக்கல் செய்தல் போன்ற பூர்வாங்க நடவடிக்கைகள் அக்டோபர் மாதத்திலேயே ஆரம்பமாக வேண்டும்.

ஆனால் அரசும் அதன் ஆயுதப்படைகளும் என்னதான் கூறினாலும் வடக்கு-கிழக்கில் எந்தவொரு தேர்தலையும் நடாத்தக்கூடிய சூழ்நிலை இல்லையென்பதே யதார்த்த நிலை.

1988, 1989 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மாகாண சபைகள் தேர்தல் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் என்பன வடக்கு-கிழக்கில் நடாத்தப்பட்டுள்ளன.

அவை எவ்வாறு இந்தியப்படையின் ஆதிக்கத்தின் கீழ் நடாத்தப்பட்டன என்பது வேறு விடயமாகவிருந்தாலும் தேர்தல்கள் நடந்தன என்றே கூறப்படுகின்றது.

ஆனால் இப்பொழுது வடக்கு-கிழக்கில் தேர்தல் நடாத்தக் கூடிய சூழ்நிலை இல்லையென்பதை ஜனாதிபதியும் அரசும் உணர்ந்திருக்கின்றனர் என்றே சொல்ல வேண்டும்.

ஜனாதிபதி பிரேமதாஸ பதவிக்கு வருமுன் இரண்டு தேர்தல்களும், பதவிக்கு வந்தவுடன் ஒரு தேர்தலும் நடைபெற்றுள்ளன.

போராட்ட சூழ்நிலை காரணமாக மாகாணசபைத் தேர்தல்களை வடக்கு-கிழக்கில் நடத்தாது விடுதல் ஜனாதிபதிக்கு நிர்வாகத் தோல்வியாகவே எடுத்துக் கொள்ளப்படும்.

ஆகவே அக்டோபர் மாதத்திலிருந்து தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஜனாதிபதிக்கு உண்டு இந்த நிர்ப்பந்தத்தின் பேரிலேயே இனப் பிரச்சினைக்கு இரண்டு மாதத்தில் தீர்வு காணப்படுமென்ற பேச்சுக்களும், இராணுவ- அரசியல் இரட்டை அணுகு முறை என்பன பற்றியும் பேசப்படுகின்றன.

எஸ். ஜி. எம்.

இதன் அடிப்படையில் யாழ் குடாநாட்டின் மீது பாரிய தாக்குதல்களை இராணுவம் மேற்கொள்ளும் அதேநேரம் தெரிவுக்குழு மூலம் அரசியல் தீர்வு காண்பதற்கான சூழ்நிலையை அரசாங்கமே முன் முயற்சியெடுத்து உருவாக்குகிறது.

எனவே இனப்பிரச்சினைக்கு ஏதாவது ஒரு வகையில் ஏதாவது ஒரு தீர்வைக்காண வேண்டிய நிர்ப்பந்தம். மாகாண சபைத் தேர்தல்களை நடாத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்து ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் ஏற்பட்டிருக்கிறது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனை எதையும் தமக்கு அரசியல் பாதிப்பு எதுவும் ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தில் ஐ.தே.க. அரசு இது வரை முன் வைக்கவில்லை. கூண்டோடு கைலாசம் என்ற நிலையில் எல்லாக் கட்சிகளின் தலையிலும் பாரத்தைப் போட்டு சர்வகட்சி மாநாடு என்றும் பாராளுமன்றத் தெரிவுக் குழு என்றும் கூறி வந்தது. சர்வகட்சி மாநாட்டை செயலிழக்கச் செய்து பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடமே அரசு பொறுப்பைச் சுமத்தியிருக்கிறது.

இப்போது அமைச்சர்கள் ரணில் விக்கிரமசிங்க, ஜோன் அமரதுங்க மற்றும் ஜனாதிபதி ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோரது கூற்றுக்கள் அரசு இனப்பிரச்சினைத் தீர்வுப் பொறுப்பை மிகத் தெளிவாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் விட்டு விட்டதை தெளிவு படுத்துகின்றன.

மேலும் விடுதலைப் புலிகளை உள்ளடக்காத எந்தத் தீர்வும் உண்மையான தீர்வாக அமையாது என்பதை உணர்ந்ததாலேதான் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்குத் தமது ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கும் படி அரசு விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது அதுமட்டுமல்ல விடுதலை புலிகள் விரும்பினால் தெரிவுக் குழுவை யாழ்ப்பாணத்துக்கு வரும்படி அழைப்பு விடுக்கலாம் என்ற முடிவும் அரசினால் எடுக்கப்பட்டுள்ளது.

இவைகள் எல்லாம் அரசின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட திருப்பங்களே. ஆனால் இவை இயல்பாகவே ஏற்படவில்லை விடுதலைப் புலிகளின் தொடர் போராட்ட ஆற்றல் வெளிப்பாடுகளும்; மாகாணசபைகள் தேர்தல்களை நடாத்த வேண்டிய நிர்ப்பந்தங்களுமே முக்கிய காரணங்களாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பரீட்சை நடைபெற்றது

கிளிநொச்சி மாவட்டத்தில் கிராமசேவையாளர் போட்டிப்பரீட்சை நேற்று நடைபெற்றது

கிளிநொச்சி கல்விப்பணிப்பாளர் நேரகாலத்துடன் இவ் வினாத்தாள்களை கொழும்பில் இருந்து எடுத்துவந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பளை உதவி அரச அதிபர் பிரிவுக்கான பரீட்சை கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலையத்தில் நேற்று நடைபெற்றது. 06

● உலக வெப்ப உயர்வு கருத்தரங்கில்

அமெரிக்க அதிபர் புஷ் ஏனைய நாடுகளுக்கு அறை கூவல்

அமெரிக்க அதிபர் புஷ் உலக வெப்ப உயர்வு பற்றிய கருத்தரங்கில் கலந்துகொண்டு புதியதொரு அறைகூவலை வர்த்தக மேம்பாடு அடைந்த நாடுகளுக்கு விடுத்தார்

அதன்படி அந்த நாடுகள் உலகில் வெப்பநிலை அதிகரிப்பைக் குறைப்பது குறித்து குறிப்பிட்ட திட்டங்களை ஏற்படுத்தி இவ்வருட இறுதிக்குள் திட்டங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்

புஷ் அவர்கள் பேரளவில் மாநாட்டில் கலந்துகொண் எதற்குபிடி கொடுக்கவில்லை.

இந்நூற்றாண்டு இறுதிக்குள் நச்சுவாயு வான் வெளியில் கலப்பதைக் குறைக்கும்படி கேட்டுக்கொண்டார்

அமெரிக்கா இதற்காக எடுத்துள்ள நடைமுறைத் திட்டங்கள் ஓரளவு நெதர்லன் நாட்டுத் திட்டங்களுடன் ஒத்துப்போவதாக அமெரிக்கச் சுற்றுப்புற வல்லுநர்கள் கூறுகின்றனர்.

தெற்கில் வெள்ள அகதிகளுக்கு போதிய நிவாரண உதவி

தெற்கில் அண்மையில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதிய நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சர்வோதயம், செஞ்சிலுவைச் சங்கம் நேற்றும் பல தொண்டர் நிறுவனங்கள் பல்வேறு உதவிகளைச் செய்துள்ளன.

இதேபோல சமூகசேவைப் பகுதியும் நிவாரண உதவிகளை மேற்கொண்டு வருகிறது.

ஆனால் வடக்கு கிழக்கு பகுதி தமிழ் அகதிகளுக்கு நிவாரண உதவிகளை மேற்கொண்டு வருகிறது.

எழுதுவினைஞர் நியமனம் சம்பள அனுமதி வேண்டும்

போட்டிப் பரீட்சையில் தெரிவான எழுதுவினைஞர்களை நியமிக்கும்போது நியமனமாகும் திணைக்களத்தின் தலைமைப்பீடம் அவர்களது சம்பளத்தை அங்கீகரித்து அனுப்பவேண்டும் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அவ்வாறு சம்பளத்துக்கான அனுமதி கொழும்பிலிருந்து வரத்தாமதம் ஆவதாலும் இந்த நியமனங்களில் தாமதம் ஏற்படுவதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (47)

கரவெட்டியில் புதிய முறையில் அந்தோனியார் திருநாள்

கரவெட்டியில் புனித அந்தோனியார் தேவாலயத்தில் புதிய முறையில் திருநாள்கள் நடைபெற்றன,

பல ஆண்டு காலமாக திருச்சொரூபம் கூட்டுக்கு வெளியே எடுத்துவரப்பட்டு வந்தமை இம்முறை நடைபெறவில்லை

இதேபோல இறுதிநாளான நேற்று திருச்சொரூப பவனியும் நடைபெறவில்லை.

யாழ், மறை வட்டத்தில் திருச்சொரூப வழிபாடு இன்றி முதல் முதல் இத்தேவாலயத்தில் திருநாள்கள் நடைபெற்றுள்ளன.

பொருள் கையிருப்பு வருடாந்த அறிக்கை

பாடசாலைகளில் ஒழுங்காக வருடாந்த பொருள் கையிருப்பு கணக்கெடுப்பும் வருடாந்த விபரத்திரட்டுச் சேகரிப்பும் நடைபெற்றதா என வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் கேட்டுள்ளது.

1987 1988. 1989. 1990. 1991 காலப்பகுதியில் இவைகள் நடத்தப்பட்டதா என்றும் அவை நடைபெறாவிட்டால் அதற்குரிய காரணங்களை தெரியப்படுத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது,

முதலில் நியமனமானவர்கள் மாற்றப்பட மாட்டார்கள்

போட்டிப்பரீட்சையில் சித்தி பெற்று தற்போது நியமிக்கப்பட்ட அமைய எழுதுவினைஞர்கள் வங்கிகளுக்கோ வேறு திணைக்களங்களுக்கோ நியமிக்கப்படமாட்டார்கள் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சித்தியடைந்த 304 பேரில் தற்போது நியமனமானவர்களில் மிகுதிப் பேர் இனிமேல் வங்கிகளுக்கோ வேறு திணைக்களங்களுக்கோ நியமிக்கப்படுவார்கள் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிறெற் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் ஜட்கலி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 14-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

அரச அதிபர் நடவடிக்கை

நேற்று யாழ். மாவட்டத்தில் நடைபெறாத கிராம சேவையாளர் போட்டிப் பரீட்சையை விரைவில் நடத்த தான் நடவடிக்கை எடுப்பதாக அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். 06

சைக்கிள் திருட்டு

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபடச்செல்பவர்களின் சைக்கிள்கள் பட்டப்பகலில் திருடப்பட்டு வருவதால் பக்தர்கள் தமது சைக்கிள்களை பாதுகாப்பான இடத்தில் நிறுத்துமாறு கோரப்பட்டுள்ளனர்.

திரும்பிவந்த போது தான் நிறுத்திவிட்டு வந்த சைக்கிள் காணாமற் போயிருப்பதைக் கண்டு நாலாபுறமும் தேடிய போது ஒருவர் அவரது சைக்கிளைத் தூக்கிச் செல்வதைக் கண்டு சத்தமிடவே திருடன் சைக்கிளைப் போட்டுவிட்டு ஓடிவிட்டானாம். 14

தபாலகங்கள் இடமாற்றம்

சமீபத்தில் இராணுவ நடவடிக்கையால் செயல் படாமல் இருக்கும் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், குமுழமுனை அலம்பில் தபாலகங்கள் வேறு இடங்களில் இயங்க வைப்பதற்கு முல்லைத்தீவு தபால் அத்தியட்சகரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன 06

உற்பத்தி வீழ்ச்சி

கடந்த ஆண்டு சோளம், சோயா, உழுந்து என்பவற்றின் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதாக விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு தெரிவித்தது

இதேபோல சில பகுதிகளில் பெரிய வெங்காயத்தின் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளது

செவ்வாய் வேலை நிறுத்தம்

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இந்தியாவில் பொது வேலை நிறுத்தம் ஒன்றை நடத்தவுள்ளன

இதனையடுத்து ஏயர் இந்திய விமான சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

ஐரோப்பிய நாடுகள் உதவி

சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கு பல ஐரோப்பிய நாடுகள் நிதி உதவி செய்ய முன்வந்துள்ளன.

பிரிட்டன், கனடா, மேற்கு ஜேர்மனி போன்ற நாடுகள் உதவி செய்யப்போவதாக அறிவித்துள்ளன.

நிவாரணம் கோரி மீண்டும் விண்ணப்பம்

தெற்கில் பாதிக்கப்பட்ட வெள்ள அகதிகளுக்கு நிவாரணம் கோரி இலங்கை அரசு வெளிநாடுகளிடமும் தொண்டர் நிறுவனங்களிடமும் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது அகதிகளின் நிலை பற்றிய படங்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மாலைதீவு முதலில் உதவி வழங்க முன்வந்துள்ளது தெரிந்ததே

அ. தி, மு, க...

பத்தாயிரம் தி.மு.க தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் வை கோபாலசாமி எம்.பியும் கைது செய்யப்பட்டுள்ளார்

இதேவேளை நாளை திங்கட்கிழமை பாட்டாளி மக்கள் கட்சியினரும் அ.தி.மு.கவுக்கு எதிராக தூக்குக்கயிறு (துலாக்கயிறு) ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தவுள்ளனர்,

சேந்தாங்குளம் ஊடாக உணவு லொறிகள் செல்லா

காங்கேசன்துறையில் இருந்து சேந்தாங்குளம் பாதையூடாக லொறிகளில் உணவுப்பொருள்களை எடுத்துவரும் வேலைகள் தற்போது நடைபெறமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவேயே இச்சேவை நடைபெறமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மாநகரில் நோய்கள் பரவுகின்றன

கொழும்பு மாநகரில் அண்மையில் ஏற்பட்ட கடும் மழை வெள்ளம் காரணமாக பல்வேறு நோய்கள் பரவி வருவதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர்

இங்குள்ள மக்களைக் கொதிக்க வைத்து ஆறிய நீரைக்குடிக்குமாறு முக்கியமாக அறிவிக்கப்பட்டுள்ளது

தற்போது நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

வடபகுதி மக்களுக்கும் இந்திய விசா கிடைக்கும்?

கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தில் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் விசா எடுப்பதற்கு பெரும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனால் தூதரகவின் உதவியையும் நாடிவருவோர்கள் தமிழ்நாட்டில் திருமணங்களை நடத்தச் செல்வோரும். ஆலயங்களுக்கு செல்வோருமே இவ்வாறு அவதிப்படுகின்றனர்"

வடபகுதி அலுவலகங்கள் வவுனியாவிற்கு மாறும்

வவுனியாவில் இடம் பெற்ற நடமாடும் சேவைகளையடுத்து வடபகுதியில் பல முக்கிய திணைக்களங்களை வவுனியாவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு பொதுவான இடம் வவுனியா எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் வவுனியாவில் படை முகாம்களும் பெரிதாக அமைக்கப்படவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சம்பளமற்ற லீவு விவரங்கள் மாகாணசபை கேட்டுள்ளது

கல்வி அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் ஊழியர்களினது பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அதிபர்கள் மற்றும் ஊழியர்களினதும் சம்பளமற்ற லீவு தொடர்பான விவரங்களை மாதாமாதம் தமக்கு அனுப்பிவைக்குமாறு வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர்களையும் பணித்துள்ளது

இவ் விவரங்களில் இச்சம்பளமற்றலீவை எடுத்த உத்தியோகத்தர்கள் பெயர் கடமையாற்றும் நிலையத்தின் பெயர் சம்பளமற்ற லீவு தொடர்பாக அறவிடப்படவேண்டிய தொகை அறவிட்டதொகை அறவிடப்படாதவிட்டால் அதற்குரிய காரணங்கள் என்பவை கேட்கப்பட்டுள்ளது, 13

★ கணவனால் துன்புறுத்தப்பட்ட

இந்தியப் பெண்ணை நாடுகடத்த பிரிட்டன் நாடாளுமன்றம் எதிர்ப்பு

1988 ஆம் ஆண்டு இருபத்து மூன்றுவயது நிரம்பிய வட இந்தியப் பெண் ஒருவர் திருமணமாகி பிரிட்டனில் இல்வாழ்வைத் தொடர்ந்தார்

ஆனால் ஒருவருடத்துக்குள்ளேயே அவர் தமது கணவனால் துன்புறுத்தப்பட்டார் கணவரை விட்டுச் சென்று பெண்களுக்கான பாதுகாப்பு நிலையம் ஒன்றில் சரணடைந்தார்.

பின்னர் ஆசிய பெண்கள் நலப் பிரிவில் பணிபுரியும் பயிற்சி பெற்றுத் தொழில் ஒன்றில் சேர்ந்தார் இந்த நேரத்தில் இங்கிலாந்தில் வந்தேற்ற குடிகள் திணைக்களம் இப்பெண்ணை மீண்டும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்ப முடிவெடுத்தது

இம் முடிவை பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் பலர் எதிர்த்துள்ளனர்,

இந்தியாவின் எதிர்க்கட்சியான லேபர் கட்சியின் நாற்பது உறுப்பினர்கள் மனிதாபிமான நோக்குடன் இப்பெண்ணுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்

இங்கிலாந்து அரசாங்கம் மனிதாபிமானத்துடன் இத்தகையோருக்கு ஆதரவு தந்து அவர்கள் இங்கிலாந்தில் தங்க அனுமதிக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

விமானக் குண்டு சந்தேக நபரை ஒப்படைக்க லிபிய சட்டம் தடை

அமெரிக்க விமானத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தமை தொடர்பாகச் சந்தேகிக்கப்படும் லிபியர்கள் இருவரும் வெளிநாடுகளிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்படுவதை லிபிய சட்டங்கள் தடை செய்கின்றன என்று லிபிய நாடாளுமன்றத்தின் தலைவர் கூறியிருக்கிறார்

இந்த லிபியர்களை தம்மிடம் ஒப்படைக்கும் படி அமெரிக்காவும் பிரிட்டனும் விடுத்த வேண்டுகோளை லிபிய நாடாளுமன்றம் இப்போது பரிசீலனை செய்து வருகிறது: